


மனைப்பிரிவு வரைபடம்

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

தென்காசி மாவட்டம்

திருவேங்கடம் வட்டம்

குருவிக்குளம் ஊராட்சி ஒன்றியம்

உமையத்தலைவன்பட்டி ஊராட்சி

வெள்ளாகுளம் கிராமம்

சர்வே எண்- :1எ/2எ1,2எ2பி,3எ, 2ஏ/2ஏ,4சி,4டி1பி,4டி2பி -இல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவின் தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : 1:400 இணையதள விண்ணப்ப எண்:1HG63JUC/2025/TCP

குறிப்புகள்

மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	=	3192.00 ச.மீ (0.79ஏக்கர்)
உத்தேச மனைப்பிரிவு சாலையின் மற்றும் மூலை முடக்குகளின் பரப்பளவு	=	1259.67 ச.மீ
மீதமுள்ள மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	=	1932.33ச.மீ
கோரிய மனைகளின்	=	20 எண்ணம்
ஒதுக்கிய மனைகளின்	=	15 எண்ணம்
மனைப்பிரிவு இடத்தின் எல்கை	=	
நிலையிலுள்ள சாலை	=	

பொது ஒதுக்கீடுகள்:-

1. உமயதலைவன்பட்டி ஊராட்சிக்கு தானபத்திர ஆவணம் எண்:1832/2025 நாள்:16.06.2025 -ன் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டவை:

1.உத்தேச மனைப்பிரிவு சாலை மற்றும் மூலை முடக்கு		= 1259.67 ச.மீ
2.உள்ளாட்சி ஒப்படைப்பு செய்யப்பட்ட பொது உபயோக(PUBLIC PURPOSE)ஒதுக்கீடு	(A)	= 9.79ச.மீ (0.56%)
3.உள்ளாட்சி ஒப்படைப்பு செய்யப்பட்ட பொது உபயோக(TANGEDCO)ஒதுக்கீடு	(B)	= 9.79ச.மீ (0.56%)
4.பூங்கா -	(C)	= 203.78ச.மீ (10.60%)

கட்டிட வரம்பு:

7.20மீ (ம) 9.0மீ அகலச்சாலைக்கு 1.50மீ

மூலை முடக்கு

7.20மீ (ம) 9.0மீ அகலச்சாலைக்கு 1.50மீ X 1.50மீ

நிபந்தனைகள்:

1.அரசாணை எண்:18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்:04.02.2019-ன் படி, (MA-1) உள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

2.அரசாணை எண்:16, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்:31.01.2020-ன் படி, (MA-1) உள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

3.இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன்.இடத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், உள்ளாட்சியில் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

4.நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என்று அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்ப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், அவர்களால் ரத்து செய்யப்படும்.
5.விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

6.நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில் நுட்ப ஆவணங்களில் (கிரையப் பத்திரம் - குத்தகை பத்திரம் -பட்டா -தானப்பத்திரம்-பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப் பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் மூலம் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

7.நீர் நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டிடம் கட்டப்பட வேண்டும்.

8.ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் -ஆளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக 6' x 4' பிரசுரிக்கப்பட வேண்டும்.

9.நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கது அல்ல.

10.மனைப்பிரிவில் அமையும் சாலையின் போக்கினை தடுக்கும் வகையில் சுற்று சுவர் எழுப்புதல் கூடாது.

11.விற்ப்பனைக்கான மனைகளை விற்ப்பனை செய்யும் போது இம்மனைப் பிரிவிற்க்கான அனுமதிக்கான ஆணையுடன் நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகலினை மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

ம.வ/தெமாநஉஅ எண்- SWP/35 /2025 வ

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
தென்காசி மாவட்டம்

ர் நிலை- III

மேற்பார்வையாளர்

Signature valid
Signed by: Assistant Director
Location:Tenkasi
Date:2025.06.24 1[illegible]7

Signature valid
Signed by: Village Panchayat President
Location:Tenkasi
Date:2[illegible]2.08[illegible]:13